நீதித்துறை நடுவர் நீதிமன்றம் , ஆலங்குளம்

முன்னிலை - திரு. S. அன்புதாசன், பிகா.ம், பி.எல்

நீதித்துறை நடுவர், ஆலங்குளம்

2021ம் வருடம் மார்ச் திங்கள் 3 ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 61/2019**

அரசுக்காக

உதவி ஆய்வாளர்

ஊத்துமலை காவல் நிலையம்

குற்ற எண். 27/2017 ..........குற்றமுறையீட்டாளர்

-எதிர்.

மகேந்திரன் ,

த/பெ. சண்முகையா .............எதிரி/குற்றம் சாட்டப்பட்டவர்

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் சிசி 61/19 என 07.03.2019 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18.02.2021 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களின் முன்னிலையிலும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆரோக்கியசாமி , B.,A,B.L., அவர்களும் ஆஜராகிய நிலையில் இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் சீரிய மேற்பார்வையில் நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு இரு தரப்பு வாதங்களையும் கேட்டு , இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

11.02.2017 ம் தேதி 20.00 மணிக்கு ஊத்துமலை காளியம்மன் கோவில் தெருவில் உள்ள சாட்சி-1ன் வீட்டின் முன்பு சாட்சி-1 நிற்கும் போது எதிரி அங்கு வந்து எதிரியின் மனைவி எதிரியை விட்டு பிரிந்து சென்றதற்கு சாட்சி-1 தான் காரணம் என்று மனதில் வைத்துக் கொண்டு சாட்சி-1 ஐ பெண்ணென்றும் பாராமல் எதிரி சாட்சி-1 ஐ பார்த்து அசிங்கமாக பேசி தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி ஊமைக்காயம் ஏற்படுத்தியும் அதை தடுக்க வந்த சாட்சி-2 ஐ காலால் மிதித்து தள்ளியும்

கொலை மிரட்டல் விடுத்து சென்ற குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),352, 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்புச் சட்டத்தின் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளார் என ஊத்துலை காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து குற்றம் சாட்டப்பட்டவர் மீது பிரிவு 173(2) குவிமுசவின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தார்,

2) மேற்படி குற்ற இறுதி அறிக்கையை கோப்பிற்கு ஆண்டுபட்டிகை வழக்காக எடுக்கப்பட்டு. பிரிவு 204 குவிமுசவின் கீழ் இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதன் பேரில். குற்றம் சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான போது, வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு பிரிவு 207 கு.வி.மு.ச.வின் படி இலவசமாக வழங்கப்பட்டது,

3) குற்றம் சாட்டப்பட்டவர்க்கு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்க போதிய சந்தர்ப்பமும் காலமும் வழங்கப்பட்டு. இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவரிடம் பிரிவு (313) (1) (அ) குவிமுசவின் படி குற்றம் சாட்டப்பட்டவரிடம் குற்றம் பற்றி வினவிய போது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்தார். குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றச்சாட்டு வனைய போதிய ஆதாரம் உள்ளதாக மேலெழுந்தவாரியாக தெரிய வந்ததால் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) குவிமுசவின் படி குற்றம் சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்புச் சட்டத்தின் படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து பிரிவு 240(2) குவிமுசவின் படி மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து குற்றம் சாட்டப்பட்டவர்க்கு விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) கு.வி.மு.ச.வின் கீழ் அழைப்பாணை அனுப்ப இந்நீதிமன்றத்தால்உத்தரவிடப்பட்டது.

4) அரசு தரப்பு சாட்சிய விசாரணை காலத்தின் போது குற்றம் சாட்டப்பட்டவரும்,

நிகழ்நிலை புகார்தாரரும் சமாதானமாக போவதாக கூறி, சமாதான மனு குவிமுச பிரிவு 320(2) ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட து. மேலும் குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுக்கள் சமரசமாக போக முடியாத குற்றச்சாட்டுக்கள் என்பதால் சமாதான மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

5) . அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு. அ.சா.ஆ.1 முதல் அ.சா..ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டன, சான்று பொருள் குறிப்பிடப்படவில்லை. அ.சா. 1 புகார்மனு கொடுத்தவர் ஆவர். அ.சா.2 மற்றும் அ.சா.3 கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். கூடுதல் சாட்சி-1 ஆன அ.சா.4 ஊத்துமலை காவல்நிலைய காவலர் ஆவர் . அரசு தரப்பில் சாட்சி பட்டியலில் 1 முதல் 9 வரையான சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் . LW3, LW4 மற்றும் LW6 முதல் LW9 ஆகிய சாட்சிகள் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களால் விசாரிக்காமல் கைவிடப்பட்டதாக மேலொப்பம் செய்யப்பட்டது.

<u>அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>

6) புகார் மனு கொடுத்த அ.சா.1 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், எதிரி தன்னை அசிங்கமாக பேசவில்லை. தன்னை பெண்ணென்றும் பாராமல் கீழே தள்ளவில்லை. கொலை மிரட்டல் விடுக்கவில்லை. என்றும், வழக்குப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக தன்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7) கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வழக்குப் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக தங்களை போலீசார் விசாரிக்கவில்லை சாட்சியம் அளித்துள்ளார்கள்.

8) இவ்வழக்கில் அ.சா. 1 முதல் அ.சா. 3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 3 வரையிலான சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. மேலும் இவ்வழக்கின் இதர சாட்சிகளை அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களால் விசாரணையிலிருந்து விலக்கி கொள்ளப்பட்டு பிரிவு 311

குவிமுசவின் கீழ் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் பேரில் தற்போது ஊத்துமலை காவல் நிலைய காவலர் அவர்கள் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டார்.

9) கூடுதல் சாட்சி-1 ஆன அ.சா4 தனது சாட்சியத்தில், இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர், விசாரணை அதிகாரி மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கையொப்பமும், தனக்கு நன்கு தெரியும் என்றும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும் , அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ 5 வரையிலான ஆவணங்களை சேகரித்தும்,. LW 1 முதல் LW8 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் எதிரியை 12.02.2017 ம் தேதி கைது செய்தும், எதிரி மீது குற்றம் புலனானதால் இதச பிரிவுகள் 294(b), 352, 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்புச் சட்டத்தின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்று சாட்சியமளித்துள்ளார்.

10) அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக உள்ள மேற்படி குற்றத்திற்கு உட்படுத்தக்கூடிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து குற்றம் சாட்டப்பட்டவர்க்கு கு,வி,மு,ச, 313(1)(ஆ) பிரிவின் கீழ் விளக்கி வினவியபோது. குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்றவாளி அல்ல என்று மறுத்துக் கூறினார், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது குற்றம் சாட்டப்பட்டவர் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லையென்று கூறினார், எனவே குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் இல்லையென்று குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு வழக்கறிஞரால் மேலொப்பம் செய்யப்பட்டதன் பேரில் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டது

11) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் இரு தரப்பு வாதுரைகள்

ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில்இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்?

**"குற்றம் சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 294(b),352, 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்புச் சட்டத்தின் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா?" என்பதேயாகும்**,

12)இவ்வழக்கின் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 புகார்மனு கொடுத்த அ.சா.1, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா,3 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி இருந்தாலும்., கூடுதல் சாட்சி 1 ஆன அ.சா.4 ஊத்துமலை காவல்நிலைய காவலரின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிருபணம். செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

13) இந்த வழக்கில் ஆஜரான குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் புகார்மனு கொடுத்த அ.சா.1, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா,3 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி இருப்பதாலும். கூடுதல் சாட்சி 1 ஆன அ.சா. 4 ஊத்துமலை காவல்நிலைய காவலரின் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எனவே இவ்ழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்,

14) மேற்கூறிய வழக்குகளை ஆராய்ந்து பார்க்கும் போது அ.சா.ஆ.2 ன் புகார் மனு First Information)சார்ந்தே அ.சா.ஆ.3 அ,ச்சு படிவ முதல்தகவல்அறிக்கை (Printed First information Report) மற்றும் இறுதியறிக்கை ஆகிய ஆவணங்கள் எவ்வித முரண்பாடுமின்றி உள்ளது.

15) புகார்மனு கொடுத்த அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியமான முதல் விசாரணையில், **"எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை. என்னை பெண்ணென்றும் பாராமல் கீழே தள்ளவில்லை. கொலை மிரட்டல் விடுக்கவில்லை. வழக்குப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது**

**வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை "** என்றும்,

16) கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது நீதிமன்ற சாட்சியமான முதல் விசாரணையில், **"ஆஜர் எதிரியை தெரியும். வழக்குப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பந்தமாக எங்களை போலீசார் விசாரிக்கவில்லை"** என்றும் தங்களை அழைத்த அரசு தரப்புக்கு முற்றிலும் முரண்பட்டு அ.சா1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்கள். பின்னிட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்காததிலிருந்தும்,அ.சா1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக உள்ள இவ்வழக்கின் குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிருபணம் செய்யப்பட்டதாக கருத இயலாது.

17) கூடுதல் சாட்சி 1 ஆன அ.சா. 4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளது ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே என்றும், அவர் இவ்வழக்கு சம்பவத்திற்கு நேரடி சாட்சி இல்லை என்பதாலும், . அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சாட்சியம் அளித்ததை மட்டும் வைத்து இவ்வழக்கில் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும்,

18) கூடுதல் சாட்சி 1 ஆன அ.சா. 4 ன் மூலம் தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகஜர் , வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 7 ன் கீழ் ஒரு தொடர்புடைய ஆவணமே என்றும், பார்வை மகஜர் சாட்சியான LW 6 மற்றும் LW 7 ஆகிய சாட்சிகளை அரசு தரப்பில் விசாரிக்காததாலும், மேற்படி அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஐ இக்குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்களை நிருபிக்க ஒரு அறுதியிட்ட நிருபணமாக கருத இயலாது என்றும்,

19) முடிவாக, புகார்மனு கொடுத்த அ.சா.1 கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிலிருந்து முரண்பட்டு தனது நீதிமன்ற சாட்சியத்தில்

பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளதாலும், இவ்வழக்கின் பிற சாட்சிகளை அரசு தரப்பில் விசாரிக்காததாலும், அரசு தரப்பு சாட்சிகள் இக்குற்றச்சாட்டின் சட்ட உட்கூறுகளுக்கு உட்பட்டு நீதிமன்ற சாட்சியம் அளிக்காததாலும், கூடுதல் சாட்சி 1 ஆன அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட அலுவல் சாட்சி இவ்வழக்கு சம்பவத்திற்கு நேரடி சாட்சி இல்லையென்றும், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளித்து இருப்பதால், கூடுதல் சாட்சி 1 ஆன அ.சா.4 சாட்சியம் அளித்ததை மட்டுமே வைத்து இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும், முடிவாக, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி இல்லை என முடிவு செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, இவ்வழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

20) இறுதியாக, இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவரை இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்புச் சட்டத்தின் படி குற்றவாளி இல்லையென தீர்மானித்து, குற்றம் சாட்டப்பட்டவரை குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

21) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் ஆஜர்படுத்தப்படவில்லை.

22) இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் 13.02.2017 ம் தேதி கைது செய்யப்பட்டு, இந்நீதிமன்ற Crmp No. 478/2017 நாள். 01.03.2017 தேதிய உத்தரவு படி பிணையில் சென்றுள்ளார்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2021 ம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.S அன்புதாசன்),
நீதித்துறைநடுவர்.
ஆலங்குளம்,

அரசு தரப்பு சாட்சிகள்

அ.சா.1 திருமலையாச்சி

அ.சா.2 கலாசெல்வி

அ.சா.3 வெள்ளத்தாய்

அ.சா.4 திரு. செல்வம் ( ஊத்துமலை காவல் நிலைய காவலர்)

அரசு தரப்பு சான்றாவணங்கள்

அ.சா.அ.1 புகார்மனுவிலுள்ள கையொப்பம்

அ.சா.ஆ.2 புகார்மனு

அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 பார்வை மகஜர்

அ.சா.ஆ.5 வரைபடம்

அரசு தரப்பு சான்று பொருள் - இல்லை

குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சிகள் ,

சான்றாவணங்கள், சான்று பொருட்கள் - இ.ல்லை

<u>பிற்சேர்க்கை</u>

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் 13.02.2017 ம் தேதி கைது செய்யப்பட்டு, இந்நீதிமன்ற Crmp No. 478/2017 நாள். 01.03.2017 தேதிய உத்தரவு படி பிணையில் சென்றுள்ளார். |
| 2 | இவ்வழக்கின் எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்து வந்தார் |
| 3 | சாட்சிகளை 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 4 | சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு வழக்கின் முடிவு பற்றி அறிவிக்கப்பட்டது |
| 5 | இறுதியாக, இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவரை இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்புச் சட்டத்தின் படி குற்றவாளி இல்லையென தீர்மானித்து, குற்றம் சாட்டப்பட்டவரை குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

(ஓம்.S அன்புதாசன்)

நீதித்துறை நடுவர்,

ஆலங்குளம்.

./உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,

ஆலங்குளம்.